**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.DVC. 9/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | நவரத்தினம் | Prosecution | PW–1 Cross |
| Husband Name | | Defence | |
| Address | | Taluk | Sirkali |
| Calling | | Age | /2025 |

**Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**
**11.06.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

1. எனது திருமணத்திற்கு பிறகு நான் எங்கு வசித்தேன் என்றால் சாவித்திரி அம்மாள் நகர், நற்கந்தன்குடி போஸ்ட், சிதம்பரம் என்னும் முகவரியில் அமைந்துள்ள எனது மாமியார் வீட்டில் வசித்தேன். நான் திருமணமாகி அங்கு சென்றபோது அந்த வீட்டில் யார் யார் வசித்தனர் என்றால் எனது மாமனார், மாமியார் மற்றும் திருமணமாகாத நிலையில் எனது நாத்தனார் இருந்தார். எனது கணவரோடு உடன்பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் எனது மாமனாருக்கு இரண்டு மனைவிகள் ஆவார்கள். மூத்த தாரத்தின் பெயர் தனலட்சுமி என்பதாகும். அவருக்கு இரண்டு பிள்ளைகள். மேற்படி நபர்கள் கோழி பள்ளத்தில் சற்று தொலைவில் தனியாக சொந்த வீட்டில் வசிக்கிறார்கள். எனது மாமனாரின் இரண்டாவது தாரத்தின் பெயர் பாமா ராணி என்பதாகும். அவருடைய பிள்ளைகள்தான் என் கணவர் மற்றும் என் நாத்தனார் ஆகியோர் ஆவார்கள். நான் எனது முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில், தனலட்சுமியின் பிள்ளைகளையும் என் கணவரோடு உடன் பிறந்தவர்கள் என்பது போல தவறாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

2. எனக்கு திருமணத்தின் போது கார் வாங்கிக் கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில் யார் பெயரில் அந்த கார் வாங்கப்பட்டது என்றால் எனது பெற்றோர்கள் என் கணவர் பெயரில் தான் I20 car வாங்கிக் கொடுத்தார்கள். அந்த காரின் பதிவெண் என்ன என்றால் முழு பதிவு எண் தெரியாது, இறுதி எண்கள் 3700 என்பதாகும். மேற்படி கார் தவணை முறையில் பணம் செலுத்தி வாங்கப்பட்டதா என்றால் இல்லை முழு பணம் செலுத்தி வாங்கப்பட்டது. தற்போது அந்தக் கார் யாரிடம் உள்ளது என்றால் என்

அண்ணனிடம் உள்ளது. ஏனென்றால், என் கணவர் உயிரோடு இருக்கும்போதே எனது அண்ணனிடம் 2022ல் ரூ.5,00,000/- க்கு விற்பனை செய்தார். என் கணவர் வெளிநாடு செல்வதற்காக முயற்சி செய்தார். அதற்கு பணம் தேவைப்படும் என்று கருதி என் அண்ணனிடம் காரை விற்று பணம் புரட்டினார். அந்த விற்பனைக்கு பிறகு என் கணவரே அந்த காரை என் அண்ணன் பெயருக்கு மாற்றி கொடுத்து விட்டார்.

3. மேற்படி ரூ.5,00,000/- பணத்தை என் கணவர் எப்படி செலவு செய்தார் என்றால் எனது நாத்தனாரின் திருமணத்திற்காக சுமன் என்பவரிடம் வட்டிக்கு கடன் வாங்கி இருந்தோம். அவருக்கு கொடுக்கவேண்டிய வட்டியாக ஒரு பெரும் தொகையை செலவழித்தார். அதுபோக, என் கணவருக்கு Type 1 Sugar, Hepatites Virus இருக்கிறது. அதற்குரிய சிகிச்சை அவர் எடுத்துக் கொள்ள நிறைய பணம் செலவு செய்தார். மேற்படி கடன் சம்பந்தப்பட்ட பதிவுகள் ஏதேனும் இருக்கிறதா என்றால் அதற்குரிய பதிவுகள் சுமனிடம் உள்ளது. நான், என் கணவர், என் மாமியார் ஆகிய மூவரும் சேர்ந்துதான் சுமனிடம் கடன் வாங்கினோம். எங்களிடம் வேறு ஆவணங்கள் இல்லை. ஏனென்றால் எங்கள் சார்பாக சுமன் தான் ஆவணங்களில் கையொப்பம் செய்து வேறு ஒரு நபரிடமிருந்து எங்களுக்கு பணம் வாங்கி கொடுத்தார். எனது கணவர் மேற்படி சுமனுக்கு வட்டி கட்டியது தொடர்பான ஆவண சாட்சியங்கள் இருக்கிறதா என்றால் இல்லை. என் கணவர் என் மாமியாரிடம் பணத்தை கொடுத்ததற்கு சான்று உள்ளதா என்றால் இல்லை.

4. என் நாத்தனாருக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 03.11.2019ல் நடைபெற்றது. என் கணவர் எவ்வளவு படித்துள்ளார் என்றால் பொறியியல் நான் எவ்வளவு படித்துள்ளேன் என்றால் நானும் பொறியியல் படித்துள்ளேன். நான் படித்த பிறகு ஏதேனும் வேலைக்கு சென்றேனா என்றால் தற்போது வரை வேலைக்கு செல்லவில்லை. கல்யாணம் ஆன பிறகு எனது நாத்தனார் அவருடைய மாமியார் வீட்டுக்கு சென்று விட்டாரா என்றால் இல்லை. ஏனெனில் அவருடைய கணவர் சென்னையில் வேலை பார்த்து வந்ததால், ஏறக்குறைய ஒரு வருட காலம் அவர் எனது மாமியார் வீட்டில் தான் தங்கியிருந்தார். அப்போது, அந்த கல்யாணம் முடிந்து ஒரு வாரம் கழித்து நானும் எனது கணவரும் வேறு ஒரு வீட்டை வாடகைக்கு பார்த்துக் கொண்டு, அங்கு சென்று வசித்து வந்தோம். நான் மட்டும் என் மாமியார் நாத்தனார் ஆகியோரிடம் பேசமாட்டேன். ஆனால் என் கணவர் அவர்களோடு சகஜமாக பழகுவார். எனது நாத்தனார் எப்போது எனது மாமியார் வீட்டில் இருந்து சென்றார் என்றால் 2020 ஆம் வருடம் டிசம்பர் மாதத்தில் சென்றார். மேற்படி காலகட்டத்திற்கு பிறகு நான் எனது கணவர் மற்றும் குழந்தைகள் ஆகிய மூவரும் தான் எனது மாமனார் மாமியாரோடு

சாவித்திரி நகரில் வசித்தோம் என்றாலும் எனது நாத்தனார் தனது கணவர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றாலும் சரிதான். ஆனால் அவர் அடிக்கடி அந்த வீட்டிற்கு வந்து மற்றும் தொலைபேசி மூலமாக எனக்கு நிறைய தொந்தரவுகள் கொடுத்தார்.

5. எனது மாமனாருக்கு தற்போது எவ்வளவு வயதாகிறது என்றால் 70 வயதுக்கு மேல் ஆகிறது. எனது மாமியாருக்கு எவ்வளவு வயது என்றால் 65 வயதுக்கு மேல் ஆகிறது. நான் எனது மனுவிலேயே என் நாத்தனார் மடிப்பாக்கம், சென்னையில் வசிப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் இறந்தபோது அவருக்கு எவ்வளவு வயது என்றால் 35 வயது. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்களில் எனது கணவரின் வயது 33 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறாக கூட குறிப்பிடப்பட்டிருக்கலாம். என் கணவர் 1988ல் பிறந்தார். சாவித்திரி நகரில் தற்போது வீடு இருக்கும் நிலத்தை என் கணவர் தான் வாங்கினார் என்று என் மனுவில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் அப்படிதான் என்னிடம் சொன்னார். அந்த இடம் எப்போது வழங்கப்பட்டது என்றால் எனது திருமணத்திற்கு முன்பே வாங்கப்பட்டு விட்டதால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. என் கணவர் பொறியியல் முடித்த போது அவருக்கு எவ்வளவு வயது என்றால் அவர் டிப்ளமோ படித்துவிட்டு தான் பொறியியல் படித்ததால் எனக்கு அது பற்றி சரியாக தெரியவில்லை. மேற்படி நிலம் வாங்கப்பட்ட சமயத்தில் என் கணவருக்கு 21 வயது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வீடு அமைந்திருக்கும் நிலம் யார் பெயரில் இருக்கிறது என்றால் எனது மாமியார் பெயரில் இருக்கிறது. அவர் அரசு ஊழியர் என்பதால் நிலம் அவர் பெயரில் வாங்கப்பட்டது. என் மாமனாரும் அரசு ஊழியர் தான் அவர் சிதம்பரம் அரசு மருத்துவமனையில் கம்பவுண்டர் ஆக பணியாற்றினார். என் மாமனார் எப்போது ஓய்வு பெற்றார் என்றால் என் திருமணத்திற்கு ஆறு வருடங்கள் முன்பு ஓய்வு பெற்றதாக கேள்விப்பட்டேன். உண்மையில் எனது மாமனார் 2010 ஆம் வருடத்தில் பணி ஓய்வு பெற்று விட்டார் என்றாலும் அவ்வாறு ஓய்வு பெற்ற போது கிடைத்த பணப் பலன்களை வைத்து மேற்படி வீடு அமைந்துள்ள இடத்தை தனது மனைவி பெயரில் வாங்கி வைத்தார் என்றாலும் அந்த இடத்திற்கும் என் கணவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. அந்த இடம் என் மாமனார் பணத்தில் வாங்கப்பட்டது கிடையாது. எனது மாமனாரின் மொத்த சம்பாத்தியம் அனைத்தும் அவருடைய முதல் தாரத்திற்கும் அவரது பிள்ளைகளுக்கும் தான் சென்றது என்று என் கணவரை சொல்லியுள்ளார்.

6. என் கணவர் பவர் பிளான்ட்டில் வேலை பார்த்தபோது எவ்வளவு சம்பளம் வாங்கினார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எந்த வருடத்தில் அங்கு பணிக்கு சேர்ந்தார் என்றால் தெரியாது. எனது பெற்றோர்கள் எப்போது இறந்தார்கள் என்றால் எனது தாயார் நான் இரண்டு வயது இருக்கும் போது இறந்துவிட்டார். என் தந்தை 2008 ஆம் வருடத்தில் இறந்தார். என் கணவர் இறந்த ஒரு வாரத்திற்கு பிறகு என் மாமனார் வீட்டில் வைத்து தகராறு நடந்ததாக என் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அந்த சமயத்தில் எனது சார்பாக என் வீட்டை சேர்ந்தவர்கள் யார் யார் இருந்தார்கள் என்றால் என்னுடைய அக்காவும் அவர் கணவரும் இருந்தார்கள். மேற்படி சண்டை சம்பந்தமாக நான் காவல்துறையில் கொடுத்த புகாரின் பதிவு செய்யப்பட்ட CSRல் நான் என் பெற்றோர் வீட்டில் இருந்தபோது எதிர்மனுதாரர்கள் அங்கு வந்து என்னிடமும் மற்றும் என் பெற்றோரிடமும் தகராறு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் அப்படித்தான் உள்ளது. ஆனால் என் பெற்றோர்கள் ஏற்கனவே இறந்து விட்டார்கள். நான் சொல்வது போல எதிர்மனுதாரர்கள் என்னிடம் தகராறு எதுவும் செய்யவில்லை என்றாலும் நானும் எனது சொந்தக்காரர்களும் சேர்ந்து கொண்டு எதிர் மனுதாரர்களிடம் பிரச்சனை செய்து அது சம்பந்தமாக ஒன்றாம் எதிர்மனுதாரர் கிள்ளை காவல் நிலைய உதவி ஆய்வாளர் இடமும், இரண்டாம் எதிர்மனுதாரர் கடலூர் மாவட்ட ஆட்சியரிடமும் எழுத்துப்பூர்வமாக புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் தான் எங்களிடம் சண்டை செய்தார்கள்.

7. நான் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் எதிர் மனுதாரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தார்களா என்றால் எடுக்கவில்லை. ஏனெனில் அவர்கள் ஊர் பொது மனிதர்களை வைத்து பஞ்சாயத்து பேசினார்கள். காவல் நிலையத்திலும் வைத்து அவர்கள் பஞ்சாயத்து பேசினார்கள். உதவி ஆய்வாளர் சங்கர் என்பவர் முன்னிலையில் எனது பிள்ளைகளுக்கு உரிய படிப்பு செலவுகளை தாங்கள் கவனித்துக் கொள்வதாகவும் தங்கள் சொத்துக்களை வித்து எனது பிள்ளைகள் பெயரில் டெபாசிட் செய்து விடுவதாகவும் ஒப்புக்கொண்டார்கள். அது தவிர எனக்கு நஷ்ட ஈடாக பணம் தரவும் ஒப்புக் கொண்டார்கள். அதன் பிறகு எப்போது எதிர்மனுதாரர்களுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் அவர்கள் ஒப்புக்கொண்டபடி எதுவும் செய்யவில்லை என்பதால் நான் மீண்டும் காவல் நிலையத்தை அணுகியதன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. நான் சொல்வது தவறு என்றாலும் நான் சிதம்பரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தை அணுகி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என சொல்லி மனு தாக்கல் செய்து அந்த மனுவில் ஏற்பட்ட உத்தரவின் பெயரில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

8. என் கணவர் இறந்து போன சமயத்தில் சம்பளத்திற்கு வேலை பார்த்தாரா அல்லது சொந்த தொழில் செய்தாரா என்றால் சொந்த தொழில் செய்தார். A N Enterprises என்னும் பெயரில் பிரிட்ஜ், ஏசி, வாஷிங் மெஷின் ஆகிய சாதனங்கள் ரிப்பேர் செய்யும் தொழில் செய்து வந்தார். என் கணவர் கடன் வாங்கி உள்ளாரா என்றால் வாங்கியுள்ளார். என் நாத்தனார் திருமணத்தின் போது ஹெச்டிஎஃப்சி வங்கியிலும் மற்றும் பஜாஜ் பைனான்சிலும் கடன் வாங்கியிருந்தார். எனக்குத் தெரிந்து அதுதான் வாங்கி இருந்தார். ஆனால் எனக்கு தெரியாமலும் அவர் கடன் வாங்கி உள்ளார். சாவித்திரி நகர் வீட்டின் பேரில் கடன் பெறப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அந்த வீடு கட்டுவதற்கு ஏற்பட்ட செலவுகளை சமாளிப்பதற்காக அந்த வீட்டின் பேரில் கடன் வாங்கப்பட்டது. எனது திருமணத்திற்கு ஒரு வருடம் முன்பு தான் அந்த வீடு கட்டப்பட்டு அவர்கள் அங்கு குடியேறினார்கள். அந்த வீட்டுக் கடன் ஸ்ரீராம் பைனான்ஸில் வழங்கப்பட்டது என்றாலும் நாளது தேதி வரை வட்டி கட்டப்படாமல் நிலுவையில் கடன் உள்ளது என்றாலும் சரிதான்.

9. sஎனது மாமனார் மற்றும் மாமியார் ஆகியோருடைய ஓய்வூதியம் சம்பந்தமாக ஏதேனும் ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர் மனுதாரர்கள் ஊதாரித்தனமாக செலவு செய்வதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் அது எத்தகைய செலவு என்றால் என் நாத்தனார் க்கு தேவை இல்லாமல் துணிமணிகள் நிறைய வாங்கிக் கொடுப்பார்கள். வீட்டுக்கு சாமான்கள் நிறைய வாங்கி அதனை உபயோகப்படுத்தாமல் வீணடிப்பார்கள். என் மாமனார் நிறைய சாராயம் குடிப்பார். அவர்கள் அதுபோக ஒரு நாய் வளர்த்தார்கள். அதற்கும் தேவையில்லாமல் பல செலவுகளை அவர்கள் செய்தார்கள்.